**தலைப்பு 302 –கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 302 – கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 25 ஆம் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

ஆணைக்குழுவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 15.63 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 13.93 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 1.70 மில்லியன் அல்லது 10.88 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | | **தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதிஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | |
| மீண்டெழுபவை | 14.78 | 13.16 | 1.62 | 10.96 |
| மூலதனம் | 0.85 | 0.77 | 0.08 | 9.41 |
| மொத்தம் | **15.63** | **13.93** | **1.70** | **10.88** |

2.2 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

ஆணைக்குழுவின் 30201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 1.00 | 1.00 | 0.30 | 0.65 | 5.00 | 2.02 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்

அரசின் நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் முன்கூட்டிய மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் ஒரு செலவின விடயமொன்றின் கீழ் மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.2 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி ஆணைக்குழுவின் செயன்முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) ஆணைக்குழுவுக்கு கிடைக்கக்கூடிய முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகள் பதிவு செய்யப்படும் பதிவேடு முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாக முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பாக கோவைகளை இணங்காணல் மற்றும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் மேன்முறையீடு புலனாய்வு மற்றும் முறைப்பாடுகளை தீர்வு செய்தல் என்பவற்றின் கீழ் 110 மேன்முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் உரிய தீர்வுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் அதற்குரிய செயல்முன்னேற்றமும், கடந்த காலங்களில் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாகவும் செயல்முன்னேற்றம் தொடர்பாகவும் தகவல் இல்லாத காரணத்தினால் திட்டமிடப்பட்ட இலக்கை நோக்கி ஆணைக்குழு அடைந்துள்ளதா என்பதை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) வரையறுக்கப்பட்ட கல்விச் சேவைகள் ஊழியர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் ஒருவரால் அவரின் சேவையை நிரந்தரமாக்குவதனை முறையாக மேற்கொள்ளாமை மற்றும் சம்பளத்தை மீளமைக்கும் போது அசாதரணத்திற்கு உட்பட்டிருந்தமை தொடர்பாக 04 சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக ஆணைக்குழுவின் தீர்மானம் 2017 மார்ச் 15 ஆந் திகதி சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், சங்கம் எடுக்கும் தீர்மானத்தை 2017 ஏப்ரல் 28 ஆந் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு அறிவிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சங்கம் எடுத்த நடவடிக்கைகளை அறிவிக்காதிருந்ததுடன் ஆணைக்குழுவினால் அது தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1972 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 16(5) பிரிவு மற்றும் 2011 யூலை 02 ஆந் திகதிய 1712/36 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட கூட்டுறவு தாபன விதிக்கோவையின் பிரகாரம், கூட்டுறவுச் சங்கத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது ஆணைக்குழுவின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக சட்டத்தின் 1.3.6(4) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தகவல்கள் தயாரிக்கப்பட்டு ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டில் 05 சங்கங்களுக்கு 30 நிரந்தர ஊழியர்களை சேர்க்கும் போதும் 02 சங்கங்களின் 57 ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் போதும் அது தொடர்பான தகவல்களை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்து உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுறவு ஊழியர்களுக்காக புதிய ஓய்வூதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்தல் 2006 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்ட பிரதான பணியாக இருந்த போதிலும், 2017 யூலை 10 ஆந் திகதி வரையிலும், இச்செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.

### 3.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

-----------------------------------------------------------------------------

ஆணைக்குழுவிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த பின்வரும் கணக்காய்வுப் பந்திகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 5 | ஓய்வூதிய முறை அமுல்படுத்தப்பட்டிருக்காமை |
| 2015 | 5 | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை மற்றும் செயலாளர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாமை |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 01 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 14 | 09 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 06 | 05 | 01 |
| | மொத்தம் | 23 | 15 | 08 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இதுவரையில் 08 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்காக 2016 ஆம் ஆண்டு முதல் வரிசை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவர் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன், 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை அப்பதவிக்காக நிரந்தர செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.